2011 பிப்ரவரி 10] [திரு. குத்தாலம் க. அன்பழகன்]

பேராசிரியர் பெருந்தகை அவர்களையும், இதுபோன்ற பொறுப்புக்களுக்கு என்னைப் பரிந்துரைத்து வாய்ப்பை நல்கி இருக்கிற தகுதியினால் பெருமைகொண்டு, தியாகத்தால் உரிமை தொண்டினால் பதவி பெற்று, சாதனைகளால் சரித்திரப் புகழ் பெற்றிருக்கிற எங்களுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி,

"கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்"

என்கின்ற வள்ளுவரின் இலக்கணத்திற்கு ஏற்றவாறு இப்பேரவையில் இந்த 5 ஆண்டுகளில் என்னுடைய கருத்துகளுக்கு முகவரி தந்த பேரவைத் தலைவராக இருக்கிற தங்களுக்கும், இவற்றிற்கெல்லாம் உறுதுணையாக இருந்த எங்களுடைய அரசு கொறடா மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த முப்பத்து ஐந்தாவது அறிக்கையினையும் மற்றும் சாலைகளும், பாலங்களும் குறித்த முப்பத்து ஆறாவது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் அறிக்கைகளை அச்சடித்து பேரவைக்கு அளிக்க இயலவில்லை. இந்த அறிக்கைகளின் படிப்பெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்கு தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எண்பத்து ஒன்றாவது முதல் நூற்று எண்பத்து நான்காவது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.